5th March 1969]

(v) பாரதி நூல்கள் (அரசியல்) தொகுதி 110 பிரதிகள்.

(உ) அரசாங்கத்தின் ஆணைகளையொட்டி இந்த நூல்கள் அனைத்தும் எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் பணம் கட்டிப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் (வி.பி.பி. மூலமாக) தற்போது அனுப்பப்படுகின்றன. எனவே, ஆதாயத்தையோ அல்லது விரயத்தையோ மதிப்பிட இயலாது.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, அரசாங்கமே மறைந்த மாண்புமிகு முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நூல்களை மலிவுப் பதிப்பில் அச்சிட்டு வெளியிட முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது அவசரமாக எடுக்கக் கூடிய முடிவல்ல. ஆழ்ந்து யோசித்துச் செய்யப்பட வேண்டிய காரியமாகும்.

Cashew cultivation

* 125 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the total acreage of cashewnut cultivation by the Forest department ;

(*b*) the total income derived therefrom, for the year 1966-67

(*c*) the expected income for the year 1967-68; and

(*d*) the method adopted for realising the income?

முந்திரி தோட்டம்

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) 1967-68 இறுதி வரையில், காடுகள் துறை 26,381 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிரிட்டுள்ளது. 1968-69-ல் கூடுதலாக 1,000 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிரிடத்திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) ரூ. 6,48,460.

(உ) ரூ. 9,19,728.

(எ) முந்திரித் தோட்டங்களிலிருந்து பயன்படு பொருள்களை திரட்டும் உரிமை பொது ஏலத்தில் விற்கப்படுகின்றது. இந்த உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நியாயமான வகையில் எவரும் முன்வாராத இடங்களில் பயன்படு பொருள்களை எடுக்கும் பணியினைக் காடுகள் துறையே மேற்கொள்கிறது.

THIRU D. SANTOSHAM: Sir, cashewnut is supposed to be one of the prime products earning foreign exchange, so far as the State of Kerala is concerned. When these cashewnuts are collected are they sold within the State itself or is any arrangement being made to export them, as is being done in Kerala ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த முந்திரி வைப்பதற்கு ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவாகிறது? மொத்தம் ஒரு ஏக்கரில் வருகின்ற வருமானத்தையும் அதற்காகும் செலவையும் கணக்கிட்டால் லாபகரமாக இருக்கிறதா என்று பரிசீலிக்கப்பட்டதா ?

[5th March 1969

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவாகிறது என்ற விவரம் இப்போதில்லை. தனியாக அது சம்பந்தமாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. வி. கே. ராமசாமி முதலியார் : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் அந்நியச் செலாவணி அதன் மூலமாக எவ்வளவு கிடைத்தது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதுபற்றிய தகவல் இல்லை. வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. எங்கள் பகுதியில் காடாம்புலியூரிலும் விருத்தாசலம் பகுதியிலும் அதிகமாக விளைகிறது. அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகிறது. எவ்வளவு ஏற்றுமதியாகிறது என்ற தகவல் இப்போதில்லை.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHI : Sir, are there any processing centres? Otherwise, how are these exported to America?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பிராசஸிங் யூனிட்டுகள் சில இடங்களில் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் காடாம்புலியூர் என்ற இடத்திலும் மற்ற இடங்களிலும் இருக்கின்றன.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, ராமனாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை, திருப்பத்தூர் தாலுகாக்களில் சுமார் 12 ஆயிரம் ஏக்கரில் சர்க்காராலும் தனிப்பட்டவர்களாலும் இந்த முந்திரி விவசாயம் நடைபெறுகிறது. அதற்கு என்று சிவகங்கையில் மார்க்கெட் ஏற்படுத்த வேண்டுமென்று மார்கெட்டிங் கமிட்டி சேர்மன் என்ற முறையில் என்னிடத்தில் விவசாய டிபார்ட்மெண்டார் வற்புறுத்தி வருகிறார்கள். அந்த இடத்தில் மாத்திரம் ஒரு மார்க்கெட் ஏற்படுத்தினால் அது கட்டுபடி ஆகுமா என்று தெரியவில்லை. இத்தனை ஆயிரம் டன் வருமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த ராஜ்யத்திலுள்ள தென்னாற்காடு போன்ற எல்லா இடங்களுக்கும் சேர்த்து ஒரு பெரிய மார்க்கெட்டை ஏற்படுத்தலாம். மலையாளத்திலுள்ளவர்கள் வாங்குவதாகச் சொல்கிறார்கள். எல்லோரும் ஒரேயிடத்தில் வந்து வாங்க ஒரு திட்டம் தயாரிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கிறது. அந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டி இப்போது வியாபாரிகளை உள்ளடக்கியதாக இருப்பதால் அந்தந்த மாவட்டத்தில் விவசாயிகள் கொண்டு வந்து கொடுக்க வசதியிருக்கிறது. ராமனாதபுரத்திலுள்ளவர்கள் தென்னாற்காடு அல்லது செங்கற்பட்டுக்கு வரவேண்டுமென்று அழைப்பது சரியல்ல. அவரவர் மாவட்டத்தில் தான் கமிட்டிகள் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கையிருக்கிறது. அந்தந்த மாவட்டத்திலுள்ள வியாபாரிகள் பல இடங்களுக்குப் போய் வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த மாவட்டத்திலேயே சேர்த்துக்கொள்வது நல்லது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : இந்த முந்திரிப் பயிர் எந்த மாவட்டத்தில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது என்பதற்கு மாவட்ட

வாரியாகப் புள்ளிவிவரம் இருக்கிறதா ? முந்திரிக் கொட்டையைப் பதனிட்டு செப்பனிடுகிற தொழில் கேரளாவில் நடக்கிறது. இப்போது அங்கே தொழிலாளர் தகராறு மிகுதியாக இருப்பதை யொட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகுதியாக கேரளா தொழில் அதிபர்கள் வந்து நிறுவனம் செய்கிறார்கள். ஆனால் இங்கே பதனிடப்பட்ட முந்திரியை அங்கே கொண்டுபோய் ஏற்றுமதி செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலேயே அவற்றை ஏற்றுமதி செய்து வெளிச் செலாவணி வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வட ஆற்காடு மாவட்டத்தில் 390 ஏக்கரும், தென்னாற்காடு மாவட்டத்தில் 16,338 ஏக்கரும், சேலம் மாவட்டத்தில் 163 ஏக்கரும், தர்மபுரி மாவட்டத்தில் 522 ஏக்கரும், கோயம்பத்தூர் மாவட்டத்தில் 811 ஏக்கரும், திருச்சி மாவட்டத்தில் 7,472 ஏக்கரும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,190 ஏக்கரும், ராமநாதபுரம் மாவட்டத்தில் 10,721 ஏக்கரும், திருநெல்வேலி மாவட்டத்தில் 2,934 ஏக்கரும், செங்கற்பட்டில் 24,512 ஏக்கரும் சாகுபடி செய்கிறார்கள். கனம் அங்கத்தினர் கோருகிற கன்னியாகுமரி மாவட்டத்தில் எவ்வளவு விளைகிறது என்ற தகவல் என்னிடம் இல்லை. தனியாகக் கேட்டால் விசாரித்துச் சொல்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, முந்திரிக் கொட்டையை வெளிநாடுகளுக்கு அனுப்பி வெளிநாட்டுச் செலாவணி கொண்டுவருவதைப் போல முந்திரி பழத்தைப் பதனிட்டு அமெரிக்கா போன்ற வெளி நாடுகளுக்கு அனுப்பி அந்நிய செலாவணி பெற முயற்சிக்கப்படுமா ? அத்துடன் முந்திரி ஓட்டை பக்குவப்படுத்தினால் பல வஸ்துக்கள் கிடைப்பதாகச் சொல்கிறார்களே, அவைகளையும் செய்ய முயற்சிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : முந்திரி பழம் அனுப்புவதாகத் தகவல் இல்லை. ஓட்டிலிருந்து பிளாஸ்டிக் போன்ற பொருள்கள் செய்யலாம் என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. டி. சந்தோஷம் : அப்படி ஓட்டிலிருந்து எடுக்கப்படும் பொருள்கள் இப்போது தயாராகி விற்பனைக்கு வருகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது எண்ணெய் தான் அதிலிருந்து எடுக்கப்படுகிறது. பிளாஸ்டிக் போன்ற பொருள்கள் இன்னும் எடுக்கப்படவில்லை.

Vacant lands of Railways

* 126. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the vacant lands near railway lines and railway stations belonging to the Railways have been handed over to the Tamil Nadu Agricultural Department, under Food Production Scheme;

(*b*) if so, the mode adopted in leasing out those vacant lands to the agriculturists for cultivation;

(*c*) the acreage of such lands under the Agriculture Department in Tamil Nadu; and

(*d*) the lease amount realised annually ?